# மாகாணக்கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# நிலையறிபரீட்சை- 2021
# வணிகக்கல்வியும் கணக்கீடும்

தரம் 11 | பகுதி 1, 11 | மூன்று மணித்தியாலயம்

மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**கவனிக்குக**
- **எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.**
- **இலக்கம் 01 தொடக்கம் 40 வரையான வினாக்களில் கொடுக்கப்பட்டுள்ள (1), (2), (3), (4) ஆகிய விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு**

- தற்போது ஏற்பட்டுள்ள கொவிட் 19 நோய்த்தாக்கத்திற்கான தீர்வாக 'சுபகுடிநீர்' ஒன்றைக் காளிதாஸ் என்ற சித்தமருத்துவத்துறை வைத்தியர் அறிமுகப்படுத்தினார். இதற்காக தனது பிரதேசத்திலுள்ள மூலிகைகளைப் பயன்படுத்தினார். இதனைத் தனது "சுகனி" வைத்திய நிலையத்தின் மூலமாக விற்பனை செய்து வருகின்றார்.

1. சுபகுடிநீரினால் நிறைவேற்றப்படும் மனிதத்தேவை,
   1. உணவு 2. சுகாதாரம் 3.மருந்து 4. பாதுகாப்பு

2. மூலிகைகள் எவ் உற்பத்திக் காரணியில் உள்ளடங்குகின்றது?
   1. நிலம் 2. உழைப்பு 3. மூலதனம் 4. முயற்சி

3. சுகனி வைத்திய நிலையம் பற்றிய தவறான கூற்று,
   1. சுகனி வைத்திய நிலையம் பதிவுசெய்தல் கட்டாயமானதாகும்.
   2. சுகனி வைத்திய நிலையம் பொதுத்துறை வணிக அமைப்பாகும்.
   3. சுகனி வைத்திய நிலையத்தின் நட்டப்பொறுப்பு வரையறையற்றது.
   4. இவ்வணிகம் சட்ட ஆளுமையற்றதாகும்.

4. இக்குடிநீர் உற்பத்தியில் தாக்கம் செலுத்திய புறச்சூழல் காரணியாக அமைவது
   1. சித்த வைத்தியர் காளிதாஸ் 2. பிரதேசத்தில் காணப்படும் மூலிகைகள்
   3. அதிக மூலதனம் காணப்படல் 4. சுகனி வைத்தியசாலை ஊழியர்



kalvi.lk

5. பின்வருவனவற்றுள் சேவை உற்பத்தி வணிகமாகக் கருதக்கூடியது,
   1. இலங்கை மத்திய வங்கி
   2. வரையறுக்கப்பட்ட பிரீமாக்கம்பனி
   3. வரையறுக்கப்பட்ட மலிபன் கம்பனி
   4. TVS மோட்டார் கம்பனி

6. X நிரலில் வணிக நிறுவனங்களின் வகைகளும் Y நிரலில் அவற்றுக்கான உதாரணங்களும் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| A. தனி வியாபாரம் | 1. பரம்ஸ் அன்கோ |
| B. பங்குடமை | 2. வரையறுக்கப்பட்ட டேவிட் கம்பனி |
| C. கூட்டுறவு அமைப்பு | 3. கணபதி ஸ்ரோர்ஸ் |
| D. கூட்டிணைக்கப்பட்ட கம்பனி | 4. கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் |

இவற்றைத் தொடர்புபடுத்தும் போது சரியான விடைத்தொகுதியாக அமைவது,
   1) A - 3 B - 1 C - 4 D- 2
   2) A - 3 B - 4 C - 1 D - 2
   3) A - 4 B - 1 C - 3 D - 2
   4) A – 3 B - 1 C - 2 D - 4

7. பாராளுமன்றச் சட்டங்கள் மூலம் உருவாக்கப்படும் வணிக அமைப்பிற்கு உதாரணம்,
   1. சில்வா அன் சகோதரர்கள்
   2. வரையறுக்கப்பட்ட டயலொக் கம்பனி
   3. அரச மருந்தாக்கக் கூட்டுத்தாபனம்
   4. வரையறுக்கப்பட்ட பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கம்

8. மொத்த, சில்லறை நடவடிக்கைகள் சில கீழே தரப்படுகின்றன.
   A. உதயா தனது பிறந்தநாள் கொண்டாட்டத்திற்காக 5kg கேக்கினைக் கொள்வனவு செய்தார்.
   B. கட்டடப் பொருட்களை விற்பனை செய்யும் குபேரன் சீமெந்துப் பைக்கற்றுக்களைக் கொள்வனவு செய்தல்.
   C. சங்கர் தனது பண்ணையிலுள்ள முட்டைகளைத் தனது அயலிலுள்ள குமரன் ஸ்ரோர்க்கு வழங்கல்.
   D. சுகுணா தனது மகளின் திருமண ஆடையினைத் தயாரிப்பதற்குத் தேவையான துணிகளைக் கொள்வனவு செய்தல்.

   மேலே தரப்பட்ட சம்பவங்களில் சில்லறை வியாபார நடவடிக்கைகளாவன,
   1. Aயும் C யும்
   2. Bயும் C யும்
   3. Aயும் D யும்
   4. Cயும் D யும்

9. இலத்திரனியல் பணம் தொடர்பான பின்வரும் கூற்றுக்களுள் சரியான கூற்றாக அமைவது,

1. கடனட்டையைப் பெறுவதற்கு வங்கிக் கணக்கு அவசியம்.
2. வரவட்டையைப் பயன்படுத்தி தனது வைப்பிலுள்ள தொகையின் அளவுக்கு மட்டும் பொருட்கள் சேவைகளைக் கொள்வனவு செய்ய முடியும்.
3. கடனட்டைக்கான கொடுப்பனவுகள் தாமதமாகும் போது தாமதக் கட்டணம் செலுத்த வேண்டிய அவசியமில்லை.
4. கடனட்டையினைப் பயன்படுத்தி ATM இயந்திரம் மூலம் பணத்தைப் பெற முடியாது.

10. காசோலை தொடர்பான பின்வரும் கூற்றுக்களில் தவறானது,

1. குறுக்குக் கோடிட்ட காசோலையை வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டே பணமாக்க முடியும்.
2. குறுக்குக் கோடிட்ட காசோலைக்குப் புறக்குறிப்பிடல் அவசியமில்லை.
3. குறுக்குக் கோடிட்ட காசோலையை வங்கிக் கருமபீடத்தில் பணமாக்க முடியாது.
4. புறக்குறிப்பிடலின் நோக்கம் உரிமை மாற்றமாகும்.

11. நுகர்வோரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகப் பெறப்படும் காப்புறுதி ஒப்பந்தம்,

1. சமூக நலன் காப்புறுதி ஒப்பந்தம்.
2. தீயபாயக் காப்புறுதி
3. உற்பத்திப் பொருள் பொறுப்புக் காப்புறுதி
4. வழிச்சரக்குக் காப்புறுதி

12. பின்வருவனவற்றுள் வாய்மொழி மூலமான தொடர்பாடலைக் கொண்ட தொகுதி,

1. பத்திரிகை, வானொலி, கட்டடங்கள்
2. சுவரொட்டி, சஞ்சிகை, கலந்துரையாடல்
3. குறுஞ்செய்தி, கூட்டம், செயலமர்வு
4. செயலமர்வு, கலந்துரையாடல், கருத்தரங்கு

13.போக்குவரத்துத் துறையின் அபிவிருத்தியாக மேம்பாலங்கள் அமைத்தல் காணப்படுகின்றது. இது போக்குவரத்தின் எவ் அடிப்படை மூலத்தில் அடங்கும்?

1. பாதை 2. சாதனம் 3. சக்தி 4. தரிப்பிடம்

14. போக்குவரத்து நேரங்களில் பாதைத்தடைகள், நெரிசல் ஏற்படுவதற்கு அதிகம் வாய்ப்புள்ள போக்குவரத்து முறை,

1. தெருப்போக்குவரத்து
2. புகையிரதப் போக்குவரத்து
3. கடல்வழிப் போக்குவரத்து
4. ஆகாயவழிப் போக்குவரத்து



kalvi.lk

15. குறிப்பிட்ட தரத்தில் உற்பத்திகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா எனக் கண்டறியும் செயற்பாடு எவ் முகாமைத்துதவக் கருமத்தில் அடங்கும்,

1. திட்டமிடல் 2. ஒழுங்கமைத்தல் 3. நெறிப்படுத்தல் 4. கட்டுப்படுத்தல்

16. பின்வருவனவற்றுள் உற்பத்திப் பொருள் கலவையில் உள்ளடங்காத உருப்படி,

1. வடிவம் 2. விளம்பரம் 3. தரம் 4. பொதியிடல்

17. அக்கறையுடைய தரப்பினர் தீர்மானம் எடுப்பதற்கான தகவலை வழங்குதல்,

1. கணக்கீட்டின் தொழிற்பாடாக அமைகின்றது.
2. கணக்கீட்டின் நோக்கமாக அமைகின்றது.
3. கணக்குப் பதிவை வலியுறுத்துகின்றது.
4. கணக்கீட்டு நியமங்களாகும்.

18. வணிகத்தின் சொத்துக்கணக்கில் மாத்திரம் பதிவுசெய்யப்படும் கொடுக்கல் வாங்கல்,

1. காசோலை மூலம் மின்கட்டணம் செலுத்துதல் ரூ. 2000
2. கடன்கொடுத்தோரான சுமனுக்கு வழங்கிய காசு ரூ. 6000
3. யாழ் தளபாடக் கம்பனியிடமிருந்து கடனுக்குத் தளபாடம் கொள்வனவு ரூ. 20000
4. கடன்பட்டோரான ராமிடமிருந்து பெற்ற காசு ரூ. 4500

19. சியாம் வணிகத்தில் 01.04.2021 இல் கணக்கீட்டுச் சமன்பாடு கீழ்வருமாறு,

சொத்துக்கள் (ரூபா) = உரிமையாண்மை (ரூபா) + பொறுப்புக்கள் (ரூபா)

50000 = 35000 + 15000

02.04.2021 இல் இடம்பெற்ற ஒரு கொடுக்கல் வாங்கலின் பின்னர் கணக்கீட்டுச் சமன்பாடு கீழ்வருமாறு,

சொத்துக்கள் (ரூபா) = உரிமையாண்மை (ரூபா) + பொறுப்புக்கள் (ரூபா)

50000 = 40000 + 10000

02.04.2021 இல் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கலாக அமைவது,

1. உரிமையாளர் தனது சொந்தப் பணத்திலிருந்து ரூ. 5000 கடன்கொடுத்தோர் ஒருவருக்கு வழங்குதல்.
2. நிறுவன மின்கட்டணம் ரூபா 5000 உரிமையாளரால் செலுத்தப்பட்டது.
3. உரிமையாளரால் மேலதிக மூலதனமாக ரூபா 5000 இடப்படுதல்.
4. நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 5000 பெறப்படுதல்.



kalvi.lk

20. இரட்டைப் பதிவுக் கோட்பாட்டுக்கமைவாக சரியான கூற்றைத் தெரிவுசெய்க.

1. வருமானம் அதிகரித்தல் வரவு, வருமானம் குறைவடைதல் செலவு.
2. சொத்து அதிகரித்தல் செலவு, சொத்து குறைதல் வரவு.
3. உரிமை அதிகரித்தல் செலவு, உரிமை குறைவடைதல் வரவு.
4. செலவு அதிகரித்தல் செலவு, செலவு குறைதல் வரவு.

❖ கீழே தரப்படும் அட்டவணையைப் பயன்படுத்தி 21, 22 ஆகிய வினாக்களுக்கு விடையளிக்குக.

| கொடுக்கல் வாங்கல் | மூலஆவணம் |
|---|---|
| 1. விநியோகத் தேவைக்காக கடனுக்கு வாங்கிய மோட்டார் ரூ. 50,000 | A. கொடுப்பனவுக் கைச்சாத்து |
| 2. குமரனுக்குக் கடன் விற்பனை ரூ. 7,500 | B. கொள்வனவுப் பட்டியல் |
| 3. மின்கட்டணம் செலுத்தியது ரூ. 1,000 | C. விற்பனைப் பட்டியல் |
| 4. கடன்கொள்வனவுகள் ரூ. 10,000 | D. நாட்குறிப்புக் கைச்சாத்து |

21. மேலே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் ஒழுங்குக்கேற்ப மூல ஆவணங்களைச சரியாகக் கொண்டுள்ள விடையைத் தெரிவுசெய்க.

1. C, A, D, B 2.D, A, B, C 3.D, C, A, B 4. D, B, C, A

22. மேலே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்களைப் பதிவுசெய்ய வேண்டிய மூலஏடுகளின் சரியான ஒழுங்கைத் தெரிவுசெய்க.

1. பொதுநாளேடு, காசேடு, கொள்வனவு நாளேடு, விற்பனை நாளேடு
2. கொள்வனவு நாளேடு, விற்பனை நாளேடு, பொது நாளேடு, காசேடு
3. கொள்வனவு நாளேடு, காசேடு, பொது நாளேடு, விற்பனை நாளேடு
4. பொது நாளேடு, விற்பனை நாளேடு, காசேடு, கொள்வனவு நாளேடு

23. பின்வருவனவற்றுள் பொதுநாளேட்டில் பதியப்பட வேண்டிய கொடுக்கல் வாங்கலைத் தெரிவுசெய்க.

1. வணிகப் பயன்பாட்டுக்காக ரூ. 5000 பெறுமதியான தளபாடம் கொள்வனவு செய்தல்.
2. செலுத்திய மின்கட்டணம் ரூ. 1500.
3. கடன்பட்டோனான சுதனிடமிருந்து வரவேண்டிய ரூ. 900 அறவிடமுடியாக்கடனாகப் பதிவழித்தல்.
4. உரிமையாளர் தனது சொந்தத் தேவைக்கு ரூ.. 2000 எடுத்துக் கொள்ளல்

24. வணிகமொன்றில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கலுக்கான இரட்டைப்பதிவு கீழ்வருமாறு,

| | |
|---|---|
| காசுக்கணக்கு வரவு | 7,400 |
| அனுமதியளித்த கழிவுக் கணக்கு வரவு | 1,600 |
| விதுஷன் கணக்குச் செலவு | 9,000 |

இக்கொடுக்கல் வாங்கலின் ரூபா 1,600 கழிவாக குறைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பமாக அமைவது

1. ரூபா 9,000 இற்குப் பொருட்களை விற்பனை செய்தல்.
2. ரூபா 9,000 கடன்கொடுத்தோருக்குப் பணம் செலுத்துதல்.
3. ரூபா 9,000 பெறுமதியான பொருட்கள் காசுக்குக் கொள்வனவு செய்தல்.
4. ரூபா 9,000 கடன்படுநரான விதுஷனிடமிருந்து காசு பெறப்படல்.

25. கொள்வனவு நாளேட்டின் மொத்தக் கூட்டுத்தொகையைப் பதிவுசெய்தல் தொடர்பான சரியான கூற்றைத் தெரிவுசெய்க.

1. கொள்வனவுக் கணக்கில் வரவில் பதிவுசெய்யப்படும்.
2. கொள்வனவுக் கணக்கில் செலவில் பதிவுசெய்யப்படும்.
3. கடன்பட்டோர் கணக்கில் செலவில் பதிவு செய்யப்படும்.
4. கடன்கொடுத்தோர் கணக்கில் வரவில் பதிவுசெய்யப்படும்.

26. வணிகமொன்றில் இடம்பெற்ற ஒரு கொடுக்கல் வாங்கலும் அதனைப் பதிவதற்குப் பயன்படுத்தப்பட்ட பூரணமற்ற இரட்டைப்பதிவும் கீழே தரப்படுகின்றது.

ரூபா 20,000 மீதியாகக் காணப்பட்ட வசந்த் என்ற கடன்கொடுத்தோனுக்கு ரூபா 18,000 பெறுமதியான காசோலை வழங்கப்பட்டு கணக்கு தீர்த்துக் கொள்ளப்பட்டது.

| | ரூபா |
|---|---|
| கடன்கொடுத்தோர் கணக்கு வரவு | (1) .......................... |
| வங்கிக் கணக்கு செலவு | 18,000 |
| (2) .........................கணக்கு செலவு | (3) ........................... |

மேலே தரப்பட்ட (1), (2), (3) ஆகிய இடைவெளிகளில் இடம்பெறக்கூடிய தொகைகளையும்
சொல்லையும் சரியான ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டுவது.

1. ரூபா 20,000 கொடுத்தகழிவு,ரூபா 2,000
2. ரூபா 20,000 பெற்ற கழிவு ரூபா 2,000
3. ரூபா 18,000, கொடுத்தகழிவுரூபா 2,000
4. ரூபா 18,000 பெற்றகழிவு,ரூபா 2,000

27. குணால் வணிகத்தினால் ஒன்று ரூபா 600 வீதம் 40 பால்மா பைக்கற்றுகள் 10% வியாபாரக் கழிவுடன் சியாம் வணிகத்துக்கு விற்பனை செய்யப்பட்டது. 20 நாட்களுக்கு முன்னர் சியாம் பணம் செலுத்தியதால்10% கழிவு அனுமதிக்கப்பட்டது. விற்பனை நாளேட்டில் பதிவு செய்யப்பட வேண்டிய தொகை யாது?

1. ரூபா 24,000 2. ரூபா 19,440 3. ரூபா 19,200 4. ரூபா 21,600

**கீழ்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 28, 29 ஆகிய வினாக்களுக்கு விடைதருக.**

2021 ஜனவரி 31 இல் சாமினி வணிகத்தின் சில்லறைக் காசாளரிடமிருந்த சில்லறைக் காசேட்டு மீதி ரூபா 1,900 ஆகும்.

2021 ஜனவரி மாதத்தில் சில்லறைக் காசேட்டுப் பகுப்பாய்வு நிரல்களின் மீதிகள் கீழ்வருமாறு

| | |
|---|---|
| சுத்தப்படுத்தல் செலவு | ரூபா 1,400 |
| உபசரிப்பு செலவு | ரூபா 3,650 |
| போக்குவரத்துச் செலவு | ரூபா 2,150 |
| எழுதுகருவிகள் செலவு | ரூபா 900 |

2020.02.01 இல் இருந்து சில்லறைக் காசேட்டிற்கான முற்பணப் பெறுமதியை ரூபா 12,000 வரை அதிகரிக்க சாமினி தீர்மானித்தார்.

28. 2020 ஜனவரி 01 இல் சில்லறைக் காசாளரிடமிருந்த சில்லறைக் காசின் பெறுமதி,

1. ரூபா 12,000 2. ரூபா 8,100 3. ரூபா 10,000 4. ரூபா 1,900

29. 2021 பெப்ரவரி 01 இல் சில்லறைக் காசாளரால் மீள்நிரப்பப்பட வேண்டிய தொகை,

1. ரூபா 10,100 2. ரூபா 10,000 3. ரூபா 12,000 4. ரூபா 8,100

30. வணிகமொன்றின் வங்கிக் கணக்கில் இடம்பெற்று வங்கிக்கூற்றில் காணப்படாத கொடுக்கல் வாங்கலைத் தெரிவுசெய்க.

1. வாடிக்கையாளர் ஒருவரின் நேரடி வைப்பு ரூபா 15,000
2. மின்கட்டணத்துக்கு வழங்கிய காசோலை ரூபா 4,000 இற்கு வங்கியினால் பணம் செலுத்தப்படல்.
3. வைப்பிலிடப்பட்ட ரூபா 13,000 காசோலை வங்கியினால் கணக்கில் செலவு வைக்கப்படல்.
4. வழங்குநர் ஒருவருக்கு வழங்கிய ரூபா 7,000 பெறுமதியான காசோலை வங்கியில் சமர்ப்பிக்கப்படவில்லை.



kalvi.lk

❖ 2021 மே 31 இல் கபிலன் வணிகத்தின் வங்கிக் கணக்கு மீதி ரூபா 13,400 ஆகக் காணப்பட்டது. இத்தினத்தில் வங்கிக்கூற்று மீதி வேறுபட்டுக் காணப்பட்டது.

A - வழங்கப்பட்ட போதும் கொடுப்பனவுக்காகச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் ரூபா 13,500.

B - நிலையான கட்டளையின் பெயரில் வங்கி செலுத்திய வணிகக் கட்டட வாடகை ரூபா 3,000.

C - வங்கி வணிகம் சார்பாக வசூலித்த பங்குலாப வருமானம் ரூபா 1,500.

31. 2021 மே 31 இல் வங்கிக் கூற்று மீதி யாதாகக் காணப்பட்டிருக்கும்.

1. ரூபா 11,900 2. ரூபா 25,400 3. ரூபா 26,900 4. ரூபா 14,900

32. பரீட்சை மீதியின் செலவுப்பக்கத்தில் தொங்கல் ஏற்படுவதற்குக் காரணமாக அமையக்கூடிய வழுவைத் தெரிவுசெய்க.

1. மூலதனக் கணக்கு மீதி ரூபா 50,000 பரீட்சை மீதிக்கு எடுத்துச் செல்லப்படவில்லை.
2. பெற்றகழிவு ரூபா 3,000 கணக்குகளில் ரூபா 300 எனப் பதிவுசெய்யப்படல்.
3. தளபாடக்கணக்கு மீதி ரூபா 10,000 பரீட்சை மீதிக்கு எடுத்துச் செல்லப்படவில்லை.
4. செலுத்திய காப்புறுதிக் கட்டணம் ரூபா 900 காப்புறுதிக் கணக்கில் ரூபா 90 எனப்பதிவு செய்யப்படல்.

33. வணிகமொன்றின் பொதுநாட்குறிப்பேட்டில் வழுவொன்றினைச் சீராக்குவதற்கான நாளேட்டுப் பதிவுகள் கீழே தரப்பட்டுள்ளது.

| விபரம் | வரவு (ரூ) | செலவு (ரூ) |
|---|---|---|
| மின்கட்டணக் கணக்கு | 6,000 | |
| தொங்கல் கணக்கு | | 6,000 |

இங்கு இடம்பெற்றுள்ள கணக்கீட்டு வழு

1. அட்டுறு மின்கட்டணம் ரூபா 6,000 சீராக்கப்படவில்லை.
2. மின்கட்டணக் கணக்கு மீதி ரூபா 6,000 பரீட்சை மீதிக்கு எடுத்துச் செல்லப்படவில்லை.
3. செலுத்திய மின்கட்டணம் ரூபா 3,000 மின்கட்டணக்கணக்கில் பக்கம் மாறிப் பதிவு செய்யப் பட்டுள்ளது.
4. செலுத்திய மின்கட்டணம் ரூபா 6,000 மின்கட்டணக் கணக்கில் வரவில் பதிவிடப் பட்டிருந்தது.



kalvi.lk

34. நேத்ரா வணிகம் தமது வணிகத்தின் மூலம் உழைத்த மேலதிகம் ரூபா 60,000 ஐ 01.05.2020 இல் தேசிய சேமிப்பு வங்கியில் 10% வருடாந்த வட்டிவீதத்தை வழங்கும் நிலையான வைப்பில் முதலீடு செய்தது. 30.04.2021 இல் வருடாந்த வட்டி வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

2020.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றின்படி,

1. நிதி நிலமைக்கூற்றில் அட்டுறு வருமானம் ரூபா 2,000 ஆகும்.
2. வருமானக்கூற்றில் வட்டி வருமானம் ரூபா 6,000 ஆகும்.
3. நிதிநிலைமைக் கூற்றில் வருமதி வட்டி வருமானம் ரூபா 6,000 ஆகும்.
4. வருமானக்கூற்றில் வட்டி வருமானம் ரூபா 4,000 ஆகும்.

35. குணால் வணிகம் 2019.01.01 இல் மோட்டார் வாகனம் ஒன்றை ரூபா 500,000 இற்குக் கொள்வனவு செய்தது. இதன் பயன்தரு ஆயுட்காலம் 10 வருடங்களாகும். பயன்தரு ஆயுட்கால முடிவில் இதன் எஞ்சிய பெறுமதி ரூபா 50,000 ஆகும். 2020.12.31 இல் உள்ளவாறு இவ்வணிகம் தயாரித்த நிதிநிலைமைக்கூற்றில் மோட்டார் வாகனத்தின் தேறிய பெறுமதி,

1. ரூபா 410,000 2. ரூபா 360,000 3. ரூபா 450,000 4. ரூபா 400,000

**கீழ்வரும் தகவல்களைப் பயன்படுத்தி 36 - 40 வரையான வினாக்களுக்க விடைதருக.**
2020.12.31 இல் இருந்தவாறு பிறின்சி வணிகத்தின் பரீட்சை மீதியிலிருந்து எடுக்கப்பட்ட சில மீதிகள் வருமாறு,

| | ரூபா |
|---|---|
| விற்பனைகள் | 700,000 |
| கொள்வனவுகள் | 375,000 |
| மோட்டார்வாகனம் (கிரயம்) | 200,000 |
| கடன்பட்டோர் | 45,000 |
| கடன்கொடுத்தோர் | 30,000 |
| இருப்பு (2020.01.01) | 25,000 |
| உட்சுமைகூலி | 2,000 |
| மின்கட்டணம் | 10,000 |
| விளம்பரம் | 18,000 |
| 10% வங்கிக்கடன் | 500,000 |
| பெற்ற வாடகை வருமானம் | 6,000 |
| மூலதனம் 2020.01.01 | 600,000 |
| வங்கி மேலதிகப்பற்று | 15,000 |
| சம்பளமும் கூலியும் | 12,000 |
| பற்று | 11,000 |


kalvi.lk

**மேலதிக தகவல்கள் :**

1. 2020.12.31 இல் சரக்கிருப்பு ரூபா 42,000
2. 2020.12.31 இல் அட்டுறு மின்கட்டணம் ரூபா 15,000
3. மோட்டார் வாகனம் வருடாந்தம் 10% நேர்கோட்டு முறையில் பெறுமானத் தேய்விடப் படுகின்றது.

36. பிறின்சி வணிகத்தின் 2020.12.31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான விற்பனைக்கிரயம்.

1. ரூபா 340,000　　2. ரூபா 360,000
3. ரூபா 402,000　　4. ரூபா 400,000

37. பிறின்சி வணிகத்தின் 2020.12.31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான தேறிய இலாபம்,

1. ரூபா 271,000　　2. ரூபா 241,000
3. ரூபா 346,000　　4. ரூபா 221,000

38. பிறின்சி வணிகத்தின் 2020.12.31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான விநியோகச் செலவு, நிதிச்செலவுகளின் பெறுமதிகள் முறையே,

1. ரூபா 38,000,ரூபா 50,000　　2. ரூபா 37,000,ரூபா 50,000
3. ரூபா 38,000,ரூபா 37,000　　4. ரூபா 37,000,ரூபா 38,000

39. பிறின்சி வணிகத்தின் 2020.12.31 இல் உள்ளவாறு நடைமுறைப் பொறுப்புக்களின் பெறுமதி,

1. ரூபா 95,000　　2. ரூபா 60,000
3. ரூபா 110,000　　4. ரூபா 80,000

40. பிறின்சி வணிகத்தின் 2020.12.31 இல் உள்ளவாறு உரிமையாண்மையின் பெறுமதி,

1. ரூபா 821,000　　2. ரூபா 810,000
3. ரூபா 589,000　　4. ரூபா 789,000

(40 x 1 = 40 புள்ளிகள்)



kalvi.lk

மாகாணக்கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
நிலையறிபரீட்சை 2021

- முதலாம் வினா உட்பட பகுதி 1 இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி 11 இல் இருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- விடைகளை தெளிவான கையெழுத்தில் எழுதுக.

## பகுதி II

(01) கீழ்க்குறித்த தகவலை அடிப்படையாகக் கொண்டு 1 - 10 வரையான வினாக்களுக்கு விடையளிக்குக.

வெளிநாடொன்றில் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக சிறுவர் பராமரிப்பு நிலையமொன்றில் பணிபுரிந்த கேசவன் மகனின் உயிரிழப்பைத் தாங்க முடியாது சொந்த நாட்டில் சேவையாற்ற வேண்டுமென விரும்பினார். இன்றைய வேலை உலகிலே அனேகமான பெற்றோர் வேலைக்குச் செல்வதால் சிறுவர்களைப் பராமரிக்க முடியாது அல்லற்படுவதைக் கண்முன்னே பார்த்துள்ளார்.

இவற்றை உற்றுநோக்கிய கேசவன் தனது மகனின் ஞாபகச்சின்னமாக "பூங்குன்றன் சிறுவர் பராமரிப்பு இல்லம்" எனும் பெயரில் வணிகமொன்றை 01.04.2020 இல் ஆரம்பித்தார். இதற்காக தான் வெளிநாட்டில் சம்பாதித்த ரூ. 1500,000 காசையும்,ரூ. 2500,000 பெறுமதியான தனது வீட்டையும் இவ்வணிகத்திற்காக ஈடுபடுத்தினார். 05 ஊழியர்களை வேலைக்கமர்த்தினார். மாவட்ட செயலகம், வங்கி, பாடசாலை என்பவற்றுக்கு அண்மித்ததாக இப்பராமரிப்பு இல்லம் அமைந்தமை பெற்றோருக்கு இனிப்பான செய்தியாக அமைந்தது.

பூங்குன்றன் சிறுவர் பராமரிப்பு இல்லத்தில் 60 சிறுவர்கள் பராமரிக்கப்படுவதுடன் மாதாந்தம் ரூ. 800 கட்டணமாக அறவிடப்படுகிறது. கொடுக்கல் வாங்கல்கள் யாவும் காசு, காசோலை, இலத்திரனியல் பணம் என்பவை மூலம் இடம்பெறுகின்றன.

2020 ஏப்ரல் மாதம் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு :

| | | |
|---|---|---|
| 01.02.2020 | விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு | ரூ. 80,000 |
| 02.04.2020 | இசைக்கருவிகள் கொள்வனவு | ரூ. 55,000 |
| 05.04.2020 | சுத்திகரிப்புப் பொருட்கள் வாங்கியது | ரூ. 23,000 |
| 07.04.2020 | உணவுப் பொருட்கள் கொள்வனவு | ரூ. 41,000 |
| 07.04.2020 | இலங்கை வங்கியில் நடைமுறைக் கணக்கு ஆரம்பித்தது | ரூ 70,000 |
| 08.04.2020 | ஊழியர் சம்பளம் செலுத்தியது | ரூ. 75,000 |
| 10.04.2020 | கிடைத்த பராமரிப்புக் கட்டணம் | ரூ. 40,000 |

விளையாட்டு உபகரணங்களுக்க வருடாந்தம் 6% பெறுமானத்தேய்வு கணிப்பிடல் வேண்டும்.



kalvi.lk

1.அ. "பூங்குன்றன் சிறுவர் பராமரிப்பு இல்லம்" உற்பத்தியின் தன்மைக்கமைய எத்தகைய வணிகம்?

ஆ. இது உரிமை அடிப்படையில் எவ்வகை வணிகம்?

2. இவ்வணிகத்தின் பலம் ஒன்றையும், வாய்ப்பு ஒன்றையும் குறிப்பிடுக.

3. உற்பத்திக் காரணிகள் இரண்டினைக் குறிப்பிடுவதுடன் அவற்றிற்கு இச்சம்பவத்திலிருந்து ஒவ்வோர் உதாரணம் தருக.

4. இங்கு குறிப்பிடப்பட்ட அகச்சூழற் காரணிகள் இரண்டையும் புறச்சூழல் காரணிகள் இரண்டையும் குறிப்பிடுக.

5.அ. இவ்வணிகத்தின் நிதியாண்டு முடிவுகாலம் எப்போது?

ஆ. 01.04.2020 இல் மூலதனத்தின் பெறுமதியைக் கணிப்பிடுக.

6. நடைமுறை வைப்பு ஆரம்பிப்பதற்கான இரட்டை விளைவையும், இரட்டைப் பதிவையும் தருக.

7. 2020 ஏப்ரல் மாத காசுக்கணக்கைத் தயாரித்து காசு மீதியைக் கணிப்பிடுக.

8. விளையாட்டு உபகரணங்களுக்கான பெறுமானத்தேய்வினைக் கணிப்பிட்டு, அதற்கான இரட்டைப் பதிவை எழுதுக.

9. ஏப்ரல் 2020 இறுதியில் நடைமுறைச் சொத்துக்கள் இரண்டினைக் குறிப்பிடுவதுடன் அவற்றின் பெறுமதிகளைக் குறிப்பிடுக.

10. 2020 ஏப்ரல் மாதத்திற்கான இலாபம் / நட்டத்தைக் கணிப்பிடுக.

(10 x 2 = 20 புள்ளிகள்)

**பகுதிII (அ)**

**வணிகக்கல்வி**

**(இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக)**

02.1.அ. வணிகம் என்பதை வரையறுக்க. (1 புள்ளி)

ஆ. வணிகத்தின் பொதுவான நோக்கங்கள் எவை? (1 புள்ளி)

2. பின்வரும் கூற்றுக்கள் உண்மையா பொய்யா எனக் குறிப்பிடுக.

A. தரமான பொருட்களை நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளல் நுகர்வோரின் நோக்கமாகும். ( )

B. ஊழியர் நலனோம்பலாக போக்குவரத்து வசதி வழங்கல், தங்குமிடவசதி வழங்கல், காப்புறுதி வசதி வழங்கல் என்பவற்றைக் குறிப்பிடலாம். ( )

C. தேவைகள் வணிகர்களால் உருவாக்க முடியும். ( )

D. வணிகம் ஒன்றின் மூலம் நுகர்வோரது தேவை விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்காக நுகர்வோருக்கு வழங்கப்படும் செயற்பாடு சேவைகள் எனப்படும். ( )

3. சுபாசினி என்பவர் கோயில்களுக்கும் வைபவங்களுக்கும் தேவையான பூமாலைகளைக் கட்டி வழங்கும் வணிகத்தில் ஈடுபட்டுள்ளார். தனக்குத் தேவையான பூக்களைக் கொழும்பிலுள்ள மலரவள் வணிகத்திலிருந்து கொள்வனவு செய்கிறார். இவர் தனக்கு உதவியாக இரு பெண்களை வேலைக்கு அமர்த்தியுள்ளார்.

அ. இச்சம்பவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அக்கறை செலுத்தும் தரப்பினர் இருவரைக் குறிப்பிடுக.

ஆ. மேலே (அ) இல் அக்கறை செலுத்தும் தரப்பினர் அக்கறை கொள்வதற்காக காரணங்கள் ஒவ்வொன்று தருக. (2 புள்ளி)

4. வணிகப் பெயர்கள் சில கீழே தரப்படுகின்றன.
   a. தாதிகள் பயிற்சிக் கல்லூரி
   b. அலன் பற்சிகிச்சை நிலையம்
   c. சுஜி மணப்பெண் அலங்கார நிலையம்
   d. சிறுவர் பூங்கா

   மேற்குறிப்பிட்ட வணிகங்களால் நிறைவேற்றப்படும் தேவைகளைக் குறிப்பிடுக.

(2 புள்ளி)

(மொத்தம் 08 புள்ளிகள்)

03.1.அ. வியாபாரம் என்பதை வரைவிலக்கணப்படுத்துக.

ஆ. மொத்த வியாபாரத்தின் பண்புகள் 2 தருக.

(2 புள்ளி)

2. பின்வரும் கூற்றுக்கள் உண்மையா பொய்யா எனக் குறிப்பிடுக.

   A. காசோலை தொடர்பில் கட்டளை இடப்படுபவர் எப்போதும் வணிக வங்கியாகும். (   )

   B. தகவல் பெறுபவர் தகவல் அனுப்புபவருக்கு தகவல் பெற்ற பின் வழங்கும் பதில் துலங்கலாகும். (   )

   C. கரன் என்ற பால் உற்பத்தியாளர் தனது அயலிலுள்ள பாடசாலைச் சிற்றுண்டிச்சாலைக்கு பாலை வழங்குதல் மொத்த வியாபாரமாகும். (   )

   D. பயணம் முடியும் வரை பயன்படுத்தக்கூடிய போக்குவரத்து முறையாக தெருப்போக்குவரத்துக் காணப்படுகின்றது. (   )

(2 புள்ளி)

3. இலங்கைத் துறைமுகத்திலிருந்து பெருமளவான தேயிலை கடல்மார்க்கமாக சரக்கு கப்பல் மூலமாக ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இக்கப்பல் டுபாய் துறைமுகத்தில் டீசலை நிரப்புவதற்காகத் தரித்துச் சென்றது.
   இச்சம்பவத்தில் கூறப்பட்டுள்ள போக்குவரத்தின் மூலக்கூறுகளைக் கூறி அவற்றுக்கான உதாரணங்களையும் தருக.

(2 புள்ளி)

4.அ. ஆதனக் காப்புறுதி வகைகள் 2 தருக.

ஆ. ஆதனக் காப்புறுதிக்கும், ஆயுள் காப்புறுதிக்கும் இடையிலான வேறுபாடுகள் 2 தருக.

(2 புள்ளி)

(மொத்தம் 08 புள்ளிகள்)



kalvi.lk

04.1.அ. முகாமைத்துவம் என்பதை வரையறுக்க.

ஆ. பின்வருவன எவ்முகாமைத்துவக் கருமத்தைக் குறிக்கும் எனக் குறிப்பிடுக.

1. நிறுவனம் தனது தூரநோக்கை மாற்றவதற்குத் தீர்மானித்தது.

2. நிறுவனத் தலைவரினால் சிறப்பாகச் செயற்பட்ட ஊழியர்களுக்குப் பரிசில் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது.

(2 புள்ளி)

2. பின்வரும் கூற்றுக்கள் உண்மையா பொய்யா எனக் கூறுக.

A. வணிகத்தின் நோக்கத்தை அடைந்து கொள்ளும் பொருட்டுத் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதற்குத் தேவையான வளங்கள், பதவிகள், பணிகளைப் பகிர்ந்தளித்தல் தொடர்பான செய்முறையே ஒழுங்கமைத்தலாகும். (  )

B. எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக வளங்களைப் பயன்படுத்தல் வினைத்திறனாகும். (  )

C. சந்தைப்படுத்தல் கலவை மாறிகளுள் வணிகத்திற்கு வருமானத்தை ஈட்டித்தரும் மாறி விலையாகும். (  )

D. கொள்வனவாளரும் விற்பனையாளரும் தொடர்புபடும் எந்தவொரு முறையும் சந்தையாகும். (  )

(2 புள்ளி)

3. சந்தைப்படுத்தல் கலவையில் பின்வரும் உருப்படிகள் எம்மாறியில் அடங்கும் எனக் குறிப்பிடுக.

அ. பொதியிடல்

ஆ. விற்பனை மேம்படுத்தல்

இ. சில்லறை வியாபாரியூடாக விற்பனை செய்தல்.

ஈ. கழிவு வழங்கல்.

(2 புள்ளி)

4.1. பின்வரும் பொருட்களுக்கான இலக்கு வாடிக்களையாளரை இனங்கண்டு குறிப்பிடுக.

a. கொழுப்பற்ற பால்மா

b. கார்ட்டூன் கதைப்புத்தகங்கள்

2. சந்தையில் காணப்படும் இடைநடுவர் இருவரைக் குறிப்பிடுக.

(2 புள்ளி)

(மொத்தம் 08 புள்ளிகள்)



Education கல்வி அධ්‍යාපන

kalvi.lk

## பகுதிII(ஆ)
## கணக்கீடு
### (இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.)

05.1. பின்வரும் கணக்கு மீதிகள் எப்பேரேட்டுக் கணக்கினுள் அடங்கும் என்பதைக் குறிப்பிடுக.

விற்பனைக் கணக்கு, கொள்வனவுக் கணக்கு, பற்றுக் கணக்கு, அட்டுறுச் செலவினம்.

(2 புள்ளி)

2. குகன் 01.01.2020 இல் ரூ. 2000,000 இட்டு வணிகத்தை ஆரம்பித்தார். அன்றைய தினம் வங்கியில் பெற்ற கடன் ரூ. 75,000 பற்றுரூ. 10,000.இங்கு மூலதனம் யாது? பொறுப்பு யாது? (2 புள்ளி)

3. கர்ணன் வணிகத்தில் 2020 மார்ச் மாதம் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் சில கணக்கீட்டுச் சமன்பாட்டில் காட்டப்பட்டுள்ளன.

| திகதி | கொடு. வாங். | சொத்துக்கள் | = | உரிமை | + | பொறுப்பு |
|---|---|---|---|---|---|---|
| 08.03.2020 | A | காசு + 200,000 | = | மூலதனம் + 200,000 | | |
| 10.03.2020 | B | சரக்கு+ 35,000 | = | | + | கடன்கொடுனர் +35,000 |
| 11.3.2020 | C | காசு + 40,000 | = | விற்பனை+ 40,000 | | |
| 13.3.2020 | D | காசு - 5,000 | = | வாடகை (-5,000) | | |
| 16.3.2020 | E | காசு - 20,000<br>தளபாடம் + 20,000 | | | | |
| 18.3.2020 | F | மோட்டார் + 180,000 | = | மூலதனம் + 180,000 | | |

அ. கொடுக்கல் வாங்கல்கள் A, B, C, D, E, F ஆகியவற்றை எழுதுக.

ஆ. சொத்துக்களில் மட்டும் தாக்கம் செலுத்தும் கொடுக்கல் வாங்கல் எது? (4 புள்ளி)

4. சேரன் வணிகத்தின் 2020 ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு :

| | |
|---|---|
| 01.01.2020 | காசு மீதி 90,000 |
| 04.01.2020 | கடனுக்கு விற்பனை (நிமல்) 25,000 |
| 05.01.2020 | கடனுக்குக் கொள்வனவு (தீபா) 18,000 |
| 09.01.2020 | விற்பனை 55,000 |
| 11.01.2020 | கொள்வனவு 21,000 |
| 14.01.2020 | நிமலிடமிருந்து பெற்ற காசு 19,500 கழிவு 500 |
| 17.01.2020 | தீபாவிற்குக் கொடுத்த காசு 17,000 கழிவு 1000 |

**வேண்டப்படுவது :**

அ. கழிவுடன் கூடிய காசேட்டினைத் தயாரித்து 31.1.2020 காசு மீதியைக் கணிப்பிடுக.

ஆ. கொடுத்தகழிவு, பெற்ற கழிவின் பெறுமதியைக் குறிப்பிடுக. (4 புள்ளி)

(மொத்தம் 12 புள்ளிகள்)



kalvi.lk

06.1.அ. “வசக்கட்டு மீள் நிரப்பல்” என்றால் என்ன? (1 புள்ளி)

ஆ. பரீட்சை மீதியின் சமன்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தாத வழுக்கள் 2 தருக. (1 புள்ளி)

2. மதன் வணிகத்தின் 2020.12.31 இல் தயாரித்த திருத்தத்திற்கான நாட்குறிப்பும், தொங்கல் கணக்கும் வருமாறு,

பொதுநாட்குறிப்பேடு

| திகதி | நாட்.கை க. இல. | விபரம் | பே.ப. | வரவு | செலவு |
|---|---|---|---|---|---|
| | | தொங்கல் கணக்கு | | 9,000 | |
| | | விற்பனைக் கணக்கு | | | 9,000 |
| | | (A………………………………) | | | |
| | | B……………………………….. | | 55,000 | |
| | | …………………………………… | | | 55,000 |
| | | (அலுவலக உபகரணக் கொள்வனவு ரூ.55,000 கொள்வனவுக் கணக்கில் பதிந்தமை திருத்தப்பட்டது.) | | | |
| | | C………………………………… | | | 7,000 |
| | | (மின்சாரக் கணக்கு மீதி பரீட்சை மீதிக்குக் கொண்டு செல்லாமை திருத்தப்பட்டது) | | | |

தொங்கல் கணக்கு

| திகதி | விபரம் | பே.ப | தொகை | திகதி | விபரம் | பே.ப | தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| | …D………… | | 9000 | | ……E……. | | 7 000 |

**வேண்டப்படுவது :**

அ. A, B, C, D, E ஆகிய இடைவெளிகளைப் பூர்த்தி செய்க.

ஆ. 31.12.2020 இல் தயாரித்த பரீட்சை மீதியில் தொங்கல் கணக்கு மீதி காணப்பட்ட நிரல் எது? (4 புள்ளி)

3.அ. பின்வரும் கொடுக்கல் வாங்கல்களுக்கான மூல ஆவணங்களைக் குறிப்பிடுக.

a. வட்டி வருமானமாக ரூ. 12,000 கிடைத்தல்.

b. ஆடை வணிகமொன்றில் ரூ. 80,000 பெறுமதியான அலுமாரி ஒன்று அபான்ஸ் கம்பனியிடமிருந்து கொள்வனவு செய்யப்படல். (2 புள்ளி)



kalvi.lk

ஆ. ஸ்ரீராம் வணிகத்தின் 31.12.2020 இல் தயாரிக்கப்பட்ட வங்கிக்கணக்கில் அனுகூலமான மீதியாகரூ 39 000 காணப்பட்டது. வேறுபாட்டிற்குரிய காரணங்கள் பின்வருமாறு:-

1. டிசம்பர் மாதம் வரையும் வங்கியில் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் ரூ. 8,000.
2. டிசம்பர் மாதம் வங்கியில் வைப்பிலிடப்பட்டு இது வரையில் வசூலிக்கப்படாத காசோலைகள் ரூ. 4,000.
3. வங்கிக்கு நேரடியாக செலுத்தப்பட்ட முதலீட்டு வருமானம் ரூ 5 000.
4. வணிகத்தில் வங்கிக் கணக்கில் பதிவு செய்யப்படாத ஆனால் வங்கியினால் அறவிடப்பட்ட வங்கிக் கட்டணம் ரூ. 1,200
5. வணிகத்தின் வங்கிக் கணக்கில் பதிவு செய்யப்படாத ஆனால் வங்கியினால் அறவிடப்பட்டகாசோலை புத்தகக் கட்டணம் ரூ. 500

**வேண்டப்படுவது :**

1. வங்கிக் கணக்கைச் சீராக்குக.
2. சீராக்கிய மீதியிலிருந்து வங்கிக் கணக்கிணக்கக்கூற்றைத் தயாரிக்குக. (4 புள்ளி)

(மொத்தம் 12 புள்ளிகள்)

07.1. தருண் வணிகத்தின் நிதியாண்டு 2020.12.31 இல் முடிவடையும் காலத்தைக் கொண்டதாகும்.

A - கிடைக்க வேண்டிய ரூபா 20,000 நிலையான வைப்பு வட்டி வருமானத்தில் ரூபா 12,000 மாத்திரமே கிடைக்கப்பெற்றுள்ளது.

B - செலுத்த வேண்டிய மின்கட்டணம் ரூபா 6,000 இல் ரூபா 4,000 மாத்திரமே செலுத்தப்பட்டுள்ளது.

அ. கொடுக்கல் வாங்கலுக்குரிய சரியான பெறுமானங்களைக் கணிப்பிட்டு கீழ்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| கொடுக்கல் வாங்கல் | காசாகப் பெறப்பட்ட வருமானம் / செய்யப்பட்ட செலவு | அட்டுறு வருமானம் / செலவு | நிதியாண்டுக்குரிய வருமானம் / செலவு |
|---|---|---|---|
| A | | | |
| B | | | |

ஆ. செம்மையாக்கப்பட வேண்டிய தொகைகளுக்கான இரட்டைப் பதிவைச் சரியான பெறுமானங்களுடன் கீழ்வரும் அட்டவணையில் பூரணப்படுத்துக. (4 புள்ளி)

| கொடுக்கல் வாங்கல் | வரவு வைக்கப்பட வேண்டிய கணக்கு | செலவு வைக்கப்பட வேண்டிய கணக்கு |
|---|---|---|
| A | | |
| B | | |

(4 புள்ளிகள்)



kalvi.lk

2. 2020.12.31 இல் மதுசன் வணிகத்தின் பரீட்சைமீதி கீழ்வருமாறு :

| விபரம் | வரவு (ரூ) | செலவு (ரூ) |
|---|---|---|
| இருப்பு 2020.01.01 இல் | 18,000 | |
| கொள்வனவுகள் | 120,000 | |
| விற்பனைகள் | | 390,000 |
| உட்சுமைக்கூலி | 4,000 | |
| கடன்பட்டோர் | 34,000 | |
| கடன்கொடுத்தோர் | | 41,000 |
| முதலீடுகள் | 100,000 | |
| முதலீட்டு வருமானம் | | 5,000 |
| மின்கட்டணம் | 23,000 | |
| காசுமீதி | 37,000 | |
| மூலதனம் | | 320,000 |
| கொடுத்தகழிவு | 1,600 | |
| பெற்றகழிவு | | 2,300 |
| விநியோகவான் (2020.01.01 இல் கொள்வனவு செய்யப்பட்டது) | 500,000 | |
| விளம்பரம் | 3,800 | |
| 8% வங்கிக்கடன் | | 100,000 |
| காப்புறுதிக் கட்டணம் | 2,400 | |
| வங்கிமீதி | 14,500 | |
| | **858,300** | **858,300** |

**மேலதிக தகவல்கள்**

1. 2020.12.31 இல் சரக்கிருப்பின் பெறுமதி ரூபா 34,000
2. 2020.12.31 இல் கடன்பட்டோரில் ரூபா 2,000 அறவிடமுடியாக்கடனாகப் பதிவளிக்கப் பட்டது.
3. விநியோக வான் வருடாந்தம் நேர்கோட்டு முறையில் 10%

பெறுமானத்தேய்விடப்பட்டது.

**வேண்டப்படுவது :**

அ. 2020.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபநட்டக் கூற்று. (4 புள்ளி)
ஆ. 2020.12.31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று. (4 புள்ளி)

(மொத்தம் 12 புள்ளிகள்)



kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page